# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

Sky Tamil Media Network (Pvt) Ltd

Scan QR Code

ISSN 2792-1026

ஐந்தாவது அகவையை நோக்கிய பயணத்தில் துணிந்தெழு சஞ்சிகை...

+94757000791 magazine.skytamilnews.com skytamil.lk@gmail.com

மாதந்தோறும் | இதழ் - 40 | 25 ஜீன் 2025 Thuninthelu Magazine

Sky Tamil Media Network (Pvt) Ltd




## உலக கவனத்தை ஈர்த்த தங்கம் பூசப்பட்ட கார்! காரின் மதிப்பு எவ்வளவு தெரியுமா?



## கிழக்கு மாகாணத்தில் அதிகளவான சுற்றுலா பயணிகளை கவரும் சல்லித்தீவு கடற்கரை




## Google Wallet vs Apple Wallet: டிஜிட்டல் பாஸ்போர்ட் எப்படி வேலை செய்கிறது?



## கவியாழர் விருதும் இளங்கலைஞர் விருதும் பெற்ற பாடலாசிரியர் வியன்சீர்




## தையல் துறையில் தனக்கென அடையாளத்தை உருவாக்கிய

# நூர்ஜஹான்

## அவர்களுடனான நேர்காணல்

sky தமிழ் Media Network

ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு (பிரைவேட்) லிமிடெட்
Sky Tamil Media Network (Pvt) Ltd
ස්කයි ටැමිල් මීඩියා නෙට්වර්ක් (ප්‍රයිවෙට්) ලිමිටෙට්
REGISTERED UNDER THE MINISTRY OF MASS MEDIA



**ஜே.எம்.பாஸித்**
ஸ்தாபக பணிப்பாளர்
ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகை



பொது முகாமையாளர்
ஹுபைப் முஸம்மில்



பிரதி முகாமையாளர்
அஸ்ரி இப்னு அமீர்



பிரதம ஆசிரியர்
எம்.எஸ்.எம்.ஸாகிர்

## ஆலோசகர்கள் :

புரவலர் ஹாசிம் உமர்
தெ. செந்தில்வேலவர் – பிரதம ஆசிரியர் தினகரன்
கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல்
கவிஞர் நஜ்முல் ஹுசைன்
ரஷீத் எம்.பியாஸ் (நளீமி) – கத்தார்
மொஹமட் சாலிஹீன் – சிரேஸ்ட வானிலை அதிகாரி
றியாத் ஏ மஜீத் – சிரேஸ்ட ஊடகவியலாளர்

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வலர நெஞ்சங்கள்

**பிரதி முகாமையாளர்:**
அஸ்ரி இப்னு அமீர் – துணிந்தெழு சஞ்சிகை

**உதவி முகாமையாளர்:**
ஹப்ஸா பஹுமீர் – துணிந்தெழு சஞ்சிகை
சி. கற்பஹாசினி – துணிந்தெழு சஞ்சிகை

**நிர்வாக குழு:**
ஜபீர் எம் மஹ்ரூப் – பிரதி முகாமையாளர், ஸ்கை தமிழ்
ஆஷிகா பர்சான் – பிரதி முகாமையாளர், ஸ்கை லங்கா

**பிரதம ஆசிரியர்:**
எம்.எஸ்.எம்.ஸாகிர்

**இணையாசிரியர்கள்:**
குலசிங்கம் கிலசன் – கல்முனை
முனீரா வாஹித் – பதுளை
மஜினா உமறு லெவ்வை – மாவடிப்பள்ளி

**ஆசிரியர் குழு :**
ஜவ்சன் அஹமட் – மருதமுனை
எம்.பஹ்த் ஜுனைட் – காத்தான்குடி
நிஹாசா நிசார் – கத்தார்
கமறுன் நிஸாம் (ஷாமென்) – கண்டி
ஏ.எம். கஸ்பியா வீவி – கல்முனை
பெனாஷில் ஷிப்னா – ஏறாவூர்
நிஹானா இஷாக் – கம்பளை
மொஹமட் நிப்ராஸ் – வாழைச்சேனை

**வடிவமைப்பாளர்கள்:**
ஏ.எச். முஹம்மட் ஹாரீஸ் – அம்பாறை
எம்.எச்.எம். ஷிப்கான் – பாலமுனை

**இணையத்தளம் மற்றும் சமூக வலைதளம் பொறுப்பாளர்:**
அஸ்ரி இப்னு அமீர் – அட்டாளைச்சேனை
எம்.பஹ்த் ஜுனைட் – காத்தான்குடி
நிஹாசா நிசார் – கத்தார்
ஜவ்சன் அஹமட் – மருதமுனை
எம்.எச்.எம். ஷிப்கான் – பாலமுனை

## ஆசிரியரின் கருத்து......

# வீதி விபத்துக்களைக் குறைக்க எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் புதிய சட்டம்

நாட்டில் அதிகரித்து வரும் விபத்துக்களைத் தடுப்பது ஒரு சமூகப் பொறுப்பாகும். இந்த சமூகப் பொறுப்பில் இருந்து எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் விபத்துகளுக்கான அபராதங்களை கூடுதலாக அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் புள்ளி விபரங்களின்படி இந்த நாட்டில் 4.8 மில்லியன் மோட்டார் சைக்கிள்கள் பயன்படுத்தப்படுகின்றன.

அடுத்து இந்த நாட்டின் பொதுமக்களது பிரதான போக்குவரத்து சாதனமாக பஸ் வண்டிகள் இருக்கின்றன. 11 ஆயிரம் பஸ் வண்டிகள் நாட்டில் காணப்படுகின்றன. இது தவிர, 13 லட்சம் முச்சக்கர வண்டிகள் நாட்டில் சேவையில் ஈடுபடுகின்றன. இவை காரணமாக நாட்டில் நாளாந்தம் விபத்துக்களது எண்ணிக்கை அதிகரித்திருக்கின்றது.

விபத்துக்கள் தொடர்பாக சட்டங்கள் சரியாக அமுல் படுத்தப்படாமை காரணமாக கேள்வி எழுப்பப்படுகின்றது. குறிப்பாக, குறைந்தபட்சம் ஒரு நாளைக்கு இரண்டு, மூன்று விபத்துக்கள் ஏற்பட்டு 5, 6 பேர் மரணிக்கின்ற நிலைமையை அவதானிக்க முடிகின்றது.

30 ஆண்டு யுத்தத்துக்குப் பிறகு இந்த நாட்டிலே வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டதோடு, அதிவேகப் பாதைகள் மற்றும் வான் பாலங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இன்றும் கூட இந்த நாட்டில் விபத்துக்கள் நாளாந்தம் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. வீட்டிலிருந்து வெளியே வந்ததும் அவர் திரும்ப வீட்டுக்கு வருவாரா? என்றதொரு கேள்வி இப்போது எழுப்பப்படுகின்றது.

2023, 2024, 2025 ஆம் ஆண்டுகளில் விபத்துக்கள் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்து காணப்படுகின்றது. இது இந்த நாட்டினுடைய வீதிகளது முன்னேற்றத்துக்குச் சமாந்தரமாக இந்த விபத்துக்களும் அதிகரித்து காணப்படுகின்றன.

கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் 70க்கும் மேற்பட்டோர் காயமடைந்திருக்கின்றனர். இவர்களில் 15 பேர் மரணித்திருக்கின்றனர்.

இந்த விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் விபத்துகளுக்கான அபராதங்களை அதிகரிப்பதற்கும் அதற்கான தண்டனைகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கின்றது. இது வரவேற்கத்தக்கதொரு நடவடிக்கையாகும். அநியாயமாக இந்த நாட்டின் அபிவிருத்திக்கு பெரும் பாதிப்பாக இன்று வீதி விபத்துக்கள் அமைந்திருக்கின்றன. இன்று சமூகப் பிரச்சினையாக வீதி விபத்துக்கள் தள்ளப்பட்டிருக்கின்றன.

நிறைய குடும்பங்கள் இதன் காரணமாக தலைமைகளை இழந்து காணப்படுகின்றனர். நூற்றுக்கணக்கானோர் தமது கால், கைகளை இழந்து அங்கவீனர்களாக மாறியிருக்கின்றனர். கடந்த 30 வருடங்களுக்குள் இந்த நாட்டில் வீதிகள் சிறப்பாக முன்னேறிய போதும் அதனால் நன்மைகள் கிடைப்பதற்குச் சமனாக விபத்துகளினால் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். மக்கள் அங்கவீனர்களாக மாறுகிறார்கள், குடும்பங்கள் தலைமையை இழந்து காணப்படுகிறார்கள், வருமானம் அற்றவர்களாக மாறுகிறார்கள், அரசாங்கம் வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கு கடுமையான சட்டங்களை அமுல்படுத்துவது வரவேற்கத்தக்கது.

போதையில் வாகனங்களைச் செலுத்துவதற்கு எதிராகவும் அரசாங்கம் கடுமையான சட்டங்களை எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் அமுல்படுத்த இருக்கின்றது. தாமதித்தேனும் இந்த சட்டங்களைக் கொண்டு வந்திருப்பதை வரவேற்கின்றோம். இதில் எவ்விதமான தயவு தாட்சணையும் இன்றி, இவற்றை அமுல் படுத்த வேண்டும். குறிப்பாக, போக்குவரத்துப் பொலிஸார் தமது ஒரு சில நன்மைகளுக்காக இந்த சட்டங்களை அமுல்படுத்தத் தவறினால், அவர்கள் இந்த நாட்டுக்கும் சமூகத்துக்கும் செய்கின்ற துரோகமாக இது அமையும்.

ஆகவே, முதலாம் திகதி முதல் போக்குவரத்துப் பொலிஸார் அமுல் படுத்துகின்ற இந்த சட்டங்களை கடுமையாக அமுல்படுத்த வேண்டும். அவற்றை மேற்பார்வை செய்வோர் எந்த வகையிலும் யாருக்கும் மன்னிப்பு கொடுக்கக் கூடாது. அப்படி இருந்தால் மட்டும்தான் இந்த விபத்துக்களைக் குறைக்க முடியும். இதனால் இந்த நாட்டுக்கும் சமூகங்களுக்கும் ஏற்படுகின்ற பாதிப்புகளைக் குறைக்க முடியும்.

புதிதாகப் பதவியேற்றிருக்கின்ற உள்ளூராட்சி மன்றங்கள் தம் பிரதேசங்களில் போக்குவரத்துச் சட்டங்களை அமுல் படுத்துவதற்கு பொலிஸாருக்கும் அரசாங்க அதிகாரிகளுக்கும் உதவ வேண்டும்.

அதேநேரம் மக்களுக்கு அறிவூட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். கூடுதலாக அறிவூட்டுவதன் மூலமே இந்த விபத்துகளைக் குறைக்க முடியும். அதற்கான நடவடிக்கைகளை போக்குவரத்து பொலிஸாரும் மற்றும் சமூக அமைப்புக்களும் வீதி விபத்துக்கள் குறித்து மக்களுக்கு அடிக்கடி அறிவிக்க வேண்டும். ஊடகங்களைப் பயன்படுத்தி இதன் பாதிப்புகளை வெளிப்படுத்த வேண்டும். அதாவது, விபத்துகளினால் தமது தலைமைகளை இழந்த, தமது பொருளாதாரத்தை இழந்தவர்களுடைய நிலைமையினை அடிக்கடி மக்களுக்குப் போட்டுகாட்டி தெளிவூட்டுவதன் மூலம் வேகமாக வாகனங்களை ஓட்டுவோருக்கு இது படிப்பினையாக அமையும்.

இது குறித்து கட்டாயமாக உள்ளூராட்சி மன்றங்களையும் பயன்படுத்தி, ஊடக அமைப்புகளும் இணைந்து வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கு ஒரு வேலைத்திட்டத்தை செயற்படுத்துவது மிக அவசியமாகும்.

**எம்.எஸ்.எம்.ஸாகிர்**
**பிரதம ஆசிரியர்**
**துணிந்தெழு சஞ்சிகை**

# வாசிக்க நேரமில்லை, வந்துவிட்டது ஆடியோ புத்தகங்கள்!



வாசிப்பு நாம் நேசிக்கவேண்டிய ஒன்று. வாசிப்பு ஒரு மனிதனைப் பூரணமாக்கும் என்றெல்லாம் நாம் படித்துப் படித்து புளித்துப் போயிருந்தாலும் முன்னரைப் போல் எம்மால் தற்போது வாசிக்க முடிவதில்லை. ஒரு புத்தகத்தை இரண்டு நாட்களுக்குள் வாசித்து முடித்துவிட்டு நிமிர்ந்து பார்த்த நாம் அதே புத்தகத்தினை வாசிக்க இரண்டு மாதங்கள் எடுத்துக் கொள்ளும் அளவிற்கு வேலைப்பளு மிக்க நேரசூசியில் இயங்கிக் கொண்டிருக்கின்றோம் என்பது பெரும் கவலைக்குரிய விடயமாகும். இதற்கெல்லாம் ஓரளவுக்கேனும் தீர்வாய் அமைந்தவையே இந்த ஆடியோ புத்தகங்கள். பொதுவாக எமக்குக் கிடைக்கும் ஓய்வு நேரங்கள், போக்குவரத்து, உடற்பயிற்சி போன்ற வேலை மிக்க நேரங்களாகவே கழிகின்றன. வேலை முடித்து விட்டு வீட்டுக்கு வரும் அந்த ஒரு மணி நேர பஸ் பயணமாகட்டும், காலையில் எழுந்து உடற்பயிற்சி செய்யும் 20 நிமிடம், குளிக்கும் 10 நிமிடம், தயாராகும் 10 நிமிடம் - இவ்வாறாகவே நாம் வேலை செய்யாமல் இருக்கும் நேரங்கள் அமைந்து விடுகின்றன. இதையும் தாண்டிக் கிடைக்கும் நேரங்களை நாம் குடும்பத்துடன் செலவிடுவதனையே பெரிதும் விரும்புகின்றோம். இதற்குள் புத்தகத்தைத் தூக்கி வாசிப்பதென்பது அபூர்வமே.

ஆக இந்த பயண நேரத்தையும் குளிக்க தயாராகும் நேரங்களையும் வாசிப்பு நேரமாக மாற்றினால் என்ன? எனும் கேள்விக்கான விடையாகவே நான் இந்த ஆடியோ புத்தகங்களைப் பார்க்கின்றேன். கையில் புத்தகங்களைத் தூக்கி வாசிக்க முடியாத நிலையிலும் புத்தகங்களைக் காதுகளால் கேட்டு வாசிப்புணர்வையும், புத்தகம் பகிரும் அறிவையும், அனுபவத்தையும் பெற்றுக் கொள்வது, இன்னும் புத்தகங்களை நாம் உயிருடன் வைத்திருப்பதற்கான மாற்று வழி அல்லவா!..

குளிக்கும் போது பாடல் கேட்பது போன்று புத்தகங்களைக் கேட்கலாம், பயணத்தின் போது ஹெட்செட் அணிந்து புத்தகங்களைக் கேட்கலாம் இவ்வாறானதொரு பழக்கத்தை

நாம் எம் மத்தியில் கொண்டு வருதல் மிகவும் பயனுள்ளதொரு முன்னெடுப்பாக அமையும். அதெல்லாம் இருக்கட்டும், புத்தகத்தை ஆடியோ வடிவில் தருபவர் யார்? எனும் கேள்வி உங்களுக்கு வருகின்றதா! அதுவும் தமிழில் யார் தான் ஆடியோ புத்தகங்களைத் தரப் போகிறார் என்று யோசிக்கின்றீர்களா.

இப்போது இதற்காக பல மொபைல் ஆப்கள் மற்றும் யூடியூப் போன்ற வலைத்தளங்களில் பல புத்தகங்கள் ஆடியோவாகப் பதிவேற்றப்பட்டுள்ளன. குறிப்பாக ராஜேஷ் குமார், சுஜாதா போன்ற எழுத்தாளர்களின் நாவல்களாகட்டும், நாகலட்சுமி ஷண்முகம் அவர்கள் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்த ஆங்கில சுய முன்னேற்றம் மற்றும் பொருளாதாரம் தொடர்பான நூல்களாகட்டும், இவை அனைத்துமே மேற்படி ஆப்களிலும் வலைத்தளங்களிலும் கிடைக்கின்றன.







குறிப்பாக ஆடியோ புத்தகங்களுக்காகவே குரல் கொடுக்கக்கூடிய குரல் பதிவாளர்களும் உள்ளனர் "மணிமாறன்" மற்றும் எனக்கு மிகவும் பிடித்த "தீபிகா அருண்" போன்றோர்களின் குரலில் நாம் கேட்கக் கூடிய புத்தகங்கள் முழுமையாக ஒரு வாசிப்பு அனுபவத்தையே எமக்குத் தந்து விடுகின்றன. இதைத் தவிர சினிமாவில் அதிகமான நடிகைகளுக்குக் குரல் கொடுக்கும் மற்றும் திரைப்படங்களிலும், நாடகங்களிலும் நடிக்கும் "தீபா வெங்கட்" அவர்களின் குரலில் அமரர் கல்கி எழுதிய "ஸுசீலா எம்.ஏ" என்னும் சிறுகதையைக் கேட்டிருக்கிறேன். 49 நிமிடங்கள் மிக அழகாகக் கடந்தது எனலாம்.





மேலும் சில நடிகர்கள், பாடகர்கள், இயக்குனர்கள் போன்றோரின் குரலிலும் அமரர் கல்கி அவர்களது சிறுகதைகள் ரசிக்கும் படியாக அமைந்துள்ளது. குறிப்பாகப் பாடலாசிரியர் கார்த்திக்கின் குரலில் எங்கள் "ஊர் சங்கீதப் போட்டி", நடிகர் பிரசன்னாவின் குரலில் "புலி ராஜா", இயக்குனர் கௌதம் வாசுதேவ் மேனன் குரலில் "எஸ் எஸ் மேனகா" மற்றும் அறிவிப்பாளர் டிடி குரலில் "சாரதையின் தந்திரம்" என ஆடியோ புத்தகங்கள் எம் காதுகளுக்கு இனிமை சேர்க்கின்றன.

இதைத்தவிர "பாம்பே கண்ணன்" குரலில் நகைச்சுவையாகத் தேவன் எழுதிய "துப்பறியும் சாம்பு, ஜஸ்டிஸ் ஜகந்நாதன்" போன்ற நகைச்சுவை கதைகள் வாசிப்பிற்கு மேலான சுவாரசியத்தை எம்முள் ஏற்படுத்த வல்லன. மேலும் இந்திரா சௌந்தர்ராஜனின் மர்ம நாவல்களை ஆடியோ புத்தகமாக கேட்கையில் அதன் மர்ம உணர்வு வாசிப்பிலும் அதிகம். இவ்வாறு வாசிக்க முடியாதவர்களும் தன் நேரங்களை ஒதுக்கி ஆடியோ புத்தகங்களின் மூலம் தம் வாசிப்பு பழக்கங்களை உயிர்ப்பித்துக் கொள்ளலாம். அதேபோன்று இன்னும் இப்பழக்கத்தின் மிச்ச சொச்சத்துடன்

இருப்பவர்கள் இப்பழக்கத்தை "இறந்து விடாமல் பாதுகாக்கும் சோம பானமாக" இதனை காணலாம். வாசிப்போம், வாசிக்க முடியாதோர் கேட்போம், நேசிப்போம்.



ஆக்கம்:
அப்துல் ஜப்பார் அர்ஷத் ஆஹாஸ்
மருதமுனை.






# நான் போதை



காது கொடுங்கள் சுயம் கூற
வந்திருக்கும் சுயநலவாதி நான்
போதை எனும் நாமம்
பூண்டுள்ளேன்.

பித்து மனதில் இருந்து
பிறந்து வந்துள்ளேன்
பலர் பித்து பிடித்து
திரிய வேண்டும் என்று
வித்து விதைத்துள்ளேன்.

மாயங்கள் பல செய்து
மானிட வாழ்வின் வண்ணத்தை
மங்க வைக்க வந்திருக்கும்
மாயக்காரன் நான்.

நாலு திசையிலும் இருக்கும்
ஒழுக்கத்தையும்,
நல்ல சிந்தனையையும்,
அழித்தொழிக்க வந்தவனே நான்.

சிகரட், கஞ்சா, மதுபானம்,
ஹெரோயின், ஐஸ், புகையிலை,
அபின் என பல அவதாரம்
எடுத்துள்ளேன்.

என் மணத்தில் மயங்கும் மனிதனின்
மதி மங்குவதில் மட்டற்று
மகிழ்கின்றேன்.

ஆடவரும் அரிவையரும்
என்னை அருந்தி அறிவில்லாமல்
அலைவதில் ஆனந்தம்
அடைகின்றேன்.

சனங்கள் என்னை சாப்பிட்டு
சமுதாயம் சீரழிவதில்
சந்தோஷம் அடைகின்றேன்.

என்னை அணைத்து எடுத்து
அலாதி ஆனந்தம் அடையும்
அறிவில்லாதோரே!..
நீங்கள் அணு அணுவாக
அழிந்து போவதை
அறிந்துள்ளீர்களா..?

என்னோடு இணைவதால்
இன்பம் அடையும்
இளையோரே!..
உங்கள் இளமை
இழக்கப்படுவதை
அறிந்துள்ளீர்களா...?

என்னை பருகும் பாலர்களே!
உமது பாலிளமை பட்டு போவதை
அறிந்துள்ளீர்களா...?

என்னை குடித்து குதூகலிப்போரே!
உங்கள் குடும்பம் குலைந்து
போவதை அறிந்துள்ளீர்களா...?

ஆன்றோர் அறிந்து கொள்ளாத
வரைக்கும் என் ஆனந்தம்
அலைபோல் அதிகரிக்கின்றது.

அறியாமையை அடிமை செய்து
ஆட்சி புரிபவன் நான்.
இருந்தாலும் இந்த அறிவியலுக்கு
அஞ்சி அலம்புகின்றேன்.

ஊரார் நடாத்தும் உளவியல்
போதனையில் நான் உடைந்து
போகின்றேன்.

வல்லவர்களின்
வழி திருப்பல்களில்
நான் வளைந்து வாடுகின்றேன்.

அறிஞர்களின் அறிவுப் பேச்சில்
நான் அஞ்சி அடங்குகின்றேன்.

திசைமுகங்களினால்
திருடர்கள் எல்லாம்
திருந்தும் போது
நான் திக்கி திணருகின்றேன்.

நான் முழுமையாக
முடங்குகின்றேன்..
அணு அணுவாக
அழிகின்றேன்...

புதுயுக பாதைக்கு
போட்ட பூட்டின் சாவியை
அறிஞன் அறிவில்
தொலைத்தது தான்
நான் செய்த தவறா?.....

ஆக்கம்:
ரீஸா இல்மி
அக்கரைப்பற்று

சிறுகதை

# அதிகாரத் துஷ்பிரயோகம்



அந்த முதியவர் மகள் போல் வளர்த்த சிறுமியிடம் திரும்பத் திரும்ப ஒரே அறிவுரையைச் சலிக்காமல் கூறிக் கொண்டிருந்தார்.

“பாருடா காவ்யா கண்ணா, தாத்தாவுக்கு வயசாகிருச்சுல்ல.... இப்போ வர்றவங்க உன்ன கூட்டிட்டு போய் ராணி மாதிரி பார்த்துப்பாங்க! இந்தப் பெட்டி பத்தியும் தெரியும்ல யாருக்கும் காட்டாம ரகசியமா வச்சுக்கணும்” சொல்லச் சொல்ல காவ்யா கேட்டுக் கொண்டிருந்தாள். ஐந்து வயதில் திருவிழாவில் காணாமல் போன குழந்தையவள். அநாதரவாய் அழுது கொண்டிருந்தவளை இந்தக் கிராமத்து முதியவர் தன்னோடழைத்து வந்து நாலைந்து வருடங்களாக வளர்த்து வந்தார்.

“அந்தச் சிறுமியை தத்தெடுக்கிறோம்” என்று ஒரு மாத காலமாய் கேட்டுக் கொண்டிருந்த பணக்காரத் தம்பதிக்கு, “அங்கேயாவது புள்ள நல்லாயிருக்கட்டும்” என்ற எண்ணத்தில் இன்று தாரைவார்க்கப் போகின்றார் அந்தக் கிழவர். சிறுமியின் பொருட்களோடு மறக்காமல் மறைத்து வைத்து அந்தச் சிறிய பெட்டியோடு சிறுமியை வழியனுப்பி வைத்தார் முதியவர்.

அந்த தம்பதியினர் அவளை பாசமாக கொஞ்சி பேசியபடி அந்தக் குறுகலான பாதைக்கப்பால் நிறுத்தயிருந்த தம் காரை நோக்கி நடந்தனர்.

“உன் பெயர் என்னம்மா” என அந்த பெண் கேட்க, அவள் கணவன், “என்ன தேவி... எதுக்கு இன்னும் பாசப் பயிர வளர்க்கிற” என சந்தேகமாக கேட்க, “யேங்க... இப்பவே ஆரம்பிச்சா, இது அழுதுகிழுது ஆர்ப்பாட்டம் பண்ணாலும் பண்ணும். வீட்டில போய் பார்த்துக்கலாம்”- அசட்டுப் புன்னகையுடன் புறப்பட்டாள் தேவி. காவ்யா அவர்களின் வீட்டுக்குச்

சென்றதும், பழக்கப்பட்ட இடம் போல "அம்மா... இது நம்ம வீடா!" என்றாள் பயத்துடன்.

"யாருக்கு யாரு அம்மா!? இனிமே என்ன மேடம்னு தான் கூப்பிடனும்! இவர ஐயான்னு கூப்பிடனும். புரிஞ்சுதா?"

அவள் சொன்ன போது காவியா அதிர்ந்து போனாள், முழு நாளும் கலங்கிப்போய் அழுது கொண்டிருந்த காவ்யா, இரும்புப் பெட்டியை மட்டும் ஒளித்து வைக்க மறக்கவில்லை.

காவ்யா சென்ற சில நாட்களிலேயே அந்த முதியவரும் மரணமடைந்து விட்டார். பாவமவர் அறிந்திருக்கவில்லை, காவ்யாவை அவர்கள் வேலைக்கு வைத்துக் கொள்வார்களென்று.

அதுவொரு பெரிய வீடு அங்கே கைக்கு அடக்கமான அந்த இரும்பு பெட்டியை மறைத்து வைக்க இடத்துக்குப் பஞ்சம் இருக்கவில்லை.

"ஏய் காவ்யா.. வீட்ட கூட்டி பெருக்கிட்டியா?",
"தோட்டமெல்லாம் துப்பரவு பண்ணி,
செடிகொடிக்கெல்லாம் தண்ணி எல்லாம் ஊத்திட்டியா?",
"ஷூவெல்லாம் க்ளீன் பண்ணியா?", "டீ ஊத்தி குடுத்திட்டியா?",
"அழுக்குத் துணியெல்லாம், பாத்திரம் எல்லாம் கழுவிட்டியா?"
"கார் கழுவிட்டியா"

இதுமட்டும்தான் அவர்களுக்கிடையேயான சம்பாசனை

"அதாங்க மேடம் போய்கிட்டு இருந்தேன்"

"கால ஒடச்சு கையில குடுத்துருவேன்! இன்னும் அதக்கூட செய்யலயா?"

காவ்யா, அடுத்த வேலைக்காக ஓடுவாள்.

தேவிக்கு இரண்டு பிள்ளைகள் அவர்கள் கூட இவளை விட்டு வைக்கவில்லை. காவ்யாவின் வயதை மனதிலே கொள்ளாமல் அவளை பாடாய்ப்படுத்தி அதிகாரம் செய்வதில் அவளுக்குத் தனிச்சுகம்.

அதிகார துஷ்பிரயோகம் என்பதை, அரசியலின் நிழல் தாண்டி இப்படியும் நிகழ்த்தலாமென நிரூபித்துக் கொண்டிருந்தது. அந்தக்குடும்பம்.

"வாங்க மேடம்... உக்காருங்க! ஸேர்! யூ.கேல இருந்து எப்ப வந்தீங்க.." கணவரின் பவ்யமான குரல் கேட்டதும் பதறியடித்துக் கொண்டு வந்தாள் தேவி.
"தேவி நம்ம ஹவுஸ் ஓனர் வந்து இருக்காங்க பாரு" கணவர் ராகேஷ்,
"வாங்க ஸேர்! வாங்க மேடம்!" ஏற்கனவே வந்து உட்கார்ந்தவர்களை வாயெல்லாம் பல்லாக வரவேற்றாள் தேவி.
"ட்ரீட்மெண்ட் எல்லாம் எப்படி போச்சு மேடம்..?" அந்த தம்பதியினரின் முகத்தில், சோகம், விரக்தி இழையோட பதறிப் போனாள் தேவி.

"மேடம்கூட இன்னொருத்தங்கள மேடம்னு சொல்லுவாங்களா!" என்று வியந்தபடி அந்த அலப்பறையில் காவ்யாவும் முன்னறைக்கு வந்து எட்டிப் பார்த்தாள்.

காவ்யாவின் உடம்பு ஒரு கணம் சிலிர்த்தது. "என்ன கூலிங்கா ஏசி போட்டிருக்கா" இல்லையே.. உடம்பு ஏன் சிலிர்க்குது.. வந்தவர்களுக்கு தேநீரூற்ற சமையலறைக்குள் நுழைந்தாள்.

வந்திருந்த தம்பதியருக்கு தேநீரோடு சில சிற்றுண்டிகளை எடுத்துச் சென்றவளை, "இவ்ளோ நேரமா? இத ஊத்திட்டு வர" என அடிக்குரலில் சீறினார் ராகேஷ்.

அந்த ஏச்சுக்கள் காவ்யாவின் காதில் விழவில்லை.. அந்த தம்பதியரின் முகத்தை பார்த்தபடி நின்ற காவ்யா.
“இவங்கள எங்கேயோ நான் பார்த்திருக்கேனே..”

அந்த தம்பதியரும் அவளையே, ஒருவித உணர்ச்சிப் போராட்டத்தோடு பார்த்துக் கொண்டிருந்தனர்.

“என்ன நிக்கற?” கோபத்தை அடக்கிக் கொண்டு கேட்டாள் தேவி.

திடுக்கிட்டவளாக, அவர்கள் முன் தட்டை வைத்து விட்டு, கொஞ்சம் நகர்ந்து அப்படியே நின்றாள். தேவி பல்லைக் கடித்தபடி, “காவ்யா!” என அதட்டினாள்.

காவ்யா பயந்தாளோ இல்லையோ, அந்த தம்பதியினர் திடுக்கிட்டு விட்டனர்.
“இந்த பாப்பா பேரு காவ்யாவா?!
உங்க அம்மா அப்பா எல்லாம் எங்க இருக்காங்க.. கனிவாய் அந்த தம்பதியினர் கேட்க”
“தெ..தெரியல” என திக்கினாள் காவ்யா.
“என்ன காவ்யா? ஒனக்கிவங்கள தெரியுமா?” என எரிச்சலுடன் தேவி கேட்க, “அம்மா உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா..” என்று ஓடி வந்த தேவியின் மகள் தடுக்கி விழுந்தாள். அவளது கையில் இருந்த இரும்பு பெட்டி சுவற்றில் மோதி வந்திருந்த தம்பதியின் முன் திறந்தே விழுந்தது.

ஹவுஸ் ஓனரின் முன் தன் மகள் விழுந்து விட்டாள் என்ற அவமானம் தேவிக்கு.
“சொரிம்மா.. காவியா இந்தப் பெட்டியை வைத்துக் கொண்டு திறக்க ட்ரை பண்ணிட்டு இருந்ததை நான் அடிக்கடி பார்த்திருக்கேன்” அவ இல்லாத நேரம் போய் தேடிப் பார்த்தா அது கிடைக்கவே இல்லை.. இன்னைக்குத்தான் அது என் கைக்கு கிடைச்சது. அதான் உங்ககிட்ட காமிக்க ஓடி வந்தேன்” என்றால் தேவியின் மகள். காவ்யாவிற்கு அழுகையே வந்தது.

“அது என் பிறப்பு ரகசியம் மேடம். அதை நான் திறக்க எவ்வளவோ ட்ரை பண்ணினேன் முடியல. தாத்தா இத ரகசியமா வச்சுக்க சொன்னாங்க” விம்மினாள் காவ்யா.

காவ்யாவை பார்த்த அந்தத் தம்பதியினர் குனிந்து தனது காலடியில் திறந்து கிடந்த பெட்டியையெடுத்தார். அதிலிருந்துது ஒரு தங்கச் சங்கிலி. அந்த டாலரில் ஐந்து வயது காவ்யாவுடன் அந்த தம்பதியரின் சிறிய புகைப்படம்.

அடுத்த நொடி,

“காவ்யாம்மா....” கட்டிக் கொண்டு உயிர் உறைய அழுது தீர்த்தார்கள்.

தேவியும் ராகேஷும் திடுக்கிட்டு எழுந்தனர். காவ்யாவை தொலைத்த சோகத்திலும் இன்னொரு குழந்தை இல்லாத ஏக்கத்திலும் ட்ரீட்மெண்ட்டிற்காக யூ.கே செல்லும் போது வீட்டு வேலைக்கு வந்த தேவியையே தனது வீட்டை பார்த்துக் கொள்ளும்படி கூறியிருந்தார்கள். காவ்யாவின் பெற்றோர்.

அதிகாரத் துஷ்பிரயோகத்திலிருந்து முழுவதுமாய் மீண்ட காவ்யா,
தேவி ராகேஷைப் பார்த்த பார்வையில் அவர்கள் புழுவாய்க் கூனிக்குறுகிப் போனார்கள்.

ஆக்கம்:
எம்.எஃப்.எஃப். சுஹைலா,
ஓப்பநாயக்க

# அடைமழை



கறுத்தது மேகம்
பொழிந்தது வானம்
நனைந்தது பூமி
குளிர்ந்தது மேனி

காலைப்பொழுதும்
மாலையாய்
காட்சி காட்டுது
கண் விழிக்க முடியாமல்
கடும் சோம்பலும் வாட்டுது

பசியோ வாட்ட ருசியாய் கேட்குது
நாக்கும் படுக்கை நகராமல்
சிறை போட்டது கூதல்
தேகத்தை வெளுத்து வாங்க
ஒரு குடுவை தேனீர்
குடிக்க மனம் ஏங்குது

அன்னையின் அழைப்பொலி
செவியில் பாயுது
அடுப்பிலுள்ள நீர் ஆவி பறக்குது
நித்திரை களைந்தென்னை
நீராடச் சொல்லுது

உடற் குளிர் போக்க
உணவுகள் படைக்கிறாள்
குடல் நிறைவாக கொடுத்
தென்னை அணைக்கிறாள்

பசியாறி பகலுணவு
உண்ட பின்பு
பாதத்தை பாதையில்
பக்குவமாய் வைக்கையிலே
வீதி எங்கும் வெள்ளம்
விழியிரண்டை அள்ளும்

தொழிலாள தோழர்களின் உள்ளம்
துயரத்தால் அலை மோதிக் கொள்ளும்
அடைமழையால் மக்களது இல்லம்
ஆங்காங்கே வேதனையைச் சொல்லும்

அணிதிரண்ட மக்களெலாம் கூடி
அவரவரின் பிள்ளைகளைத் தேடி
பாடசாலைப் படிகளிலே ஏறி
பதறுகின்ற காட்சிகள் கோடி

வீதியிலே காட்சியெல்லாம்
பார்த்த படி வீடு திரும்பினேன்
மறுபடி கடிகாரம் காட்டியது நாலு மணி
கால்கள் நடந்தது பழைய படி

**திருமதி. பானு ஜிப்ரி
7 , கானடி வீதி
சாய்ந்தமருது – 11**



# கோளும் புறமும்

இரு குடும்பம் ஒற்றுமையாய்
இருப்பதனை கண்டு
கோள்மூட்டி கெடுத்து விட்டால்
கொடியவள் தான் அன்று

கெடுத்ததினால் பிளவு பட்ட
குடும்பம் தனை கண்டு
மனநிறைவு கண்டுவிட்டால்
மாயவள் தான் இன்று

முன்னாள் அவள் பேசிடுவாள்
முகம் மலர அன்று
பின்னால் அவள் திரிந்திடுவாள்
புறம் பேசி இன்று
தனக்கு வரக் காத்திருக்கும்
தண்டனையை மறந்து

பார்ப்பவர் தன் கண்களுக்கு
பத்தினி போல் நடந்து
தன் துயரம் அனைத்தையுமே மறந்து
பிறர் துயரம் படுவதனை ரசித்து

தாய் செய்த கெடுதியினால்
சேய் வாழ்க்கை தடம் புரண்டு
நாளை மறுமையிலும்
நரக சித்தியோடு
செல்ல வேண்டும் அங்கு

**நூருல் பாத்திமா ரஃபாய்தீன்.**
**வெலிப்பிட்டிய**
**வெலிகம**

# பரீட்சைப்பேறு

ஔவை மிகச் சிறந்த தாய்
தாய்மொழியில் தமிழ் இனிக்க
அமுதூட்டிக் காத்தாள்

கற்றும் தந்தாள்
தூக்கணாங் குருவிக்கூடு
தேன்கூடு கருங்குளவிக்கூடு
என அடுக்கினாள்
திறமைகள் யார்க்கும் ஒவ்வொன்று
அதுவும் எளிதென்றாள்

எத்தனை பாடமிருந்தாலும்
அத்தனையும் எடுத்தான்
சிறப்புச்சித்தி வாழ்த்துக்கள்

இறைநாட்டப்படி - நீயும் நன்றாய்ப்படி
சமூகத்தின் ஏணிப்படியாக
சாதாரணமாக சிந்தித்து
கவலையை விட்டுவிடு
இது சாதாரணதரப் பரீட்சை தானே!

உயர்தரத்தில் சாதிக்க
உனக்கொரு சவால்
பரீட்சை கைகொடுக்க வில்லையா?
கவலையை விடு
உன்னைப் பார்த்துக்
காத்திருக்கிறது வாய்ப்புக்கள் கோடி
ஓடிக் கொண்டிரு திரும்பிப்
பார்க்க நேரமில்லாது

சுவையாகச் சமைக்கும் தாயைப் பார்
பரீட்சையில் அவர் சித்தியடைந்திருந்தால்
சுவையான உணவுக்கு
கடை தேடித் தோற்றுப்போய் இருப்பாய்

தந்தை பல்கலை சென்றிருந்தால்
நீயின்று இறைசமாதியில்
படைக்கப்படக் காத்துக்
கொண்டிருப்பாய்
கிட்டாதாயின் வெட்டென
மறவென்றாள் ஔவை

எல்லாம் நன்மைக்கே என்றார்கள்
மாநபி முஹம்மத்
இதுவும் கடந்து போகும் மகனே
காத்திரு கை வந்து சேரும்
வெற்றியின் பூ மாலைகள்



அ. ல. முகைமினா
கிண்ணியா

# ஆளுமை அறிமுகம்



# எச்.எம்.என். எ. நூர்ஜஹான்

## தையல் துறையில் தனக்கென ஒரு அடையாளத்தைப் பெற்ற கண்டி நூர்ஜஹான் அவர்களின் நேர்காணல்.

மத்திய மலைநாட்டில் இயற்கை வளத்தால் சூழப்பட்ட அழகான நகரமான கண்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட எச்.எம். என் அடுமை மற்றும் குறைஷா பீ பீ தம்பதியினருக்கு பிறந்த குழந்தை நூர்ஜஹான் ஆவார்.

இவரது கணவர் அப்துல் லதீப் மற்றும் ஒரே புதல்வியான பாத்திமா ஹனாவும் உள்ள ஓர் அழகிய குடும்பமாக வாழ்ந்து வருகிறார்கள். இவருக்கு இரு சகோதரர்களும் இரு சகோதரிகளும் உள்ளனர். இவர் தான் வீட்டுக்கு கடைசியாகவும் செல்லப் பிள்ளையாகவும் உள்ளார். இவரது கணவர் ஆண்களின் ஆடைகள் தைப்பதை வியாபாரமாகச் செய்கிறார்.

இவர் தனது உயர்தரம் வரையிலான படிப்பை கண்டி பதுார்தின் மஹ்மூத் மகளிர் கல்லூரியில் கற்றார். இவர் தனது தொழிலுக்கு அடித்தளமிடும் வகையில் உயர்தர டிப்ளோமா பட்டதாரியாக Dress Making மற்றும் Pattern Making எனும் இரு விடயங்களையும் சிறப்பாக கற்றுள்ளார். மேலும் Hannz Ladies Clothing எனும் சிறு கைத்தொழிலினை தையல் துறையில் நடாத்தி வருகிறார்.

தனக்கான ஓர் அடையாளமாக சிறு கைத்தொழிலான தையல் துறையை ஆதாரமாகக் கொண்ட நூர்ஜஹான் அவர்களுடனான நேர்காணல் இதோ....

**1. நீங்கள் தையல் துறையை தெரிவு செய்யவும் தையல் பாடநெறியினை ஆரம்பிக்கவும் உந்துசக்தியாக இருந்தது எது ?**

எனக்கு சிறு வயதிலிருந்தே ஆடைகள் தைப்பதில் மிகுந்த ஆர்வம் இருந்தது. தையல் துறையை நான் முறையாக கற்றுக் கொண்டு, வீட்டில் தையலினை ஒரு வியாபாரமாக செய்து கொண்டிருக்கும் போது எனது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரின் சிறந்த ஊக்குவிப்பினால்

தையல் பாடநெறி வகுப்பினை செய்ய ஆரம்பித்தேன்.

**2) நீங்கள் தையல் துறையை தெரிவு செய்தமைக்கான காரணம் ?**

நான் தையல் துறையை தெரிவு செய்தமைக்கு முக்கிய காரணமே சுய தொழிலுக்காகவும் கணவருக்கு துணையாக இருக்க வேண்டும் என்ற எண்ணமாகும்.

**3) தையல் துறையில் நீங்கள் செய்யும் பணிகள் எவை ?**

தையல் துறையை கற்க வருபவர்களில் விதவைப் பெண்கள், தந்தையில்லாத பிள்ளைகள் இருப்பின் அவர்களில் மிகவும் வறிய மட்டத்தில் இருப்பவர்களை அடையாளம் கண்டு, தையல் தொழிலை கற்கும் முழு பாடநெறிக்கும் புலமைப் பரிசில் வழங்குகிறேன்.

அதுமட்டுமின்றி பிரதேச கச்சேரிகளில் இலவசமாக தையல் வகுப்புக்களை நடாத்தியுள்ளேன். தையலை கற்று தொழில் செய்ய முனைவோர்களுக்கு உதவிகள் தேவைப்படும் பட்சத்தில் உதவி செய்துள்ளேன்.

**4) தையல் துறையானது பெண்களுக்கு இலகுவான துறையாக இருந்தாலும், அதில் நீங்கள் எதிர்கொண்ட சவால்கள் மற்றும் அதனை எவ்வாறு தீர்த்துக் கொண்டீர் ?**

நான் சிங்கள மொழி மூலம் கற்றதனால் தையல் படிக்கும் போது சிங்கள் ஆசிரியர் ஒருவரிடம் கல்வி கற்பது இலகுவாக இருந்தது. ஆனால் தமிழ் மொழி மூலம் தையலை கற்றுக் கொடுப்பது எனக்கு மிகவும் சவாலாக இருந்தது. எனினும் அதனை நான் வெற்றிகரமாக எதிர்கொண்டேன். பின்னர் தனியாக தொழிலை ஆரம்பிக்கும் போது நிறைய முட்டுக்கட்டைகள் தோன்றின. பல நபர்களின் பேச்சுக்களுக்கு மத்தியில் எனது முயற்சியை விட்டுக் கொடுக்காமல் நான் ஆரம்பத்தில் எனது கணவரின் ஊரான பூண்டுலோயாவில் தையல் பயிற்சியினை ஒரு வீடொன்றில் 10 மாணவர்களைக் கொண்டு ஆரம்பித்தேன். பின்னர் கண்டியில் ஒரு வீடொன்றில் 10 மாணவர்களைக் கொண்டு பயிற்சி நெறியை ஆரம்பித்தேன். அதன் பின்னர் கண்டியில் உள்ள ஜின்னா மண்டபத்தில் எனது பயிற்சிநெறி வெற்றிகரமாக தொடரப்பட்டது. பின்னர் கொழும்பு மற்றும் மடவளையிலும் எனது தையல் பாடநெறி நடாத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து தற்போது கண்டியில் உள்ள



ஜின்னா மண்டபத்திலும் மடவளையில் உள்ள தாருல் ஹக்கமிலும் எனது பாடநெறி நடாத்தப்பட்டு வருகிறது.

மேலும் எனது இந்த வெற்றிப் பயணம் 2021 இல் தையல் பாடநெறி Foundation Level இல் ஆரம்பிக்கப்பட்டு, 2024 இல் தையல் டிப்ளோமா பாடநெறியை ஆரம்பிக்கும் அளவிற்கு வளர்ச்சி அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**5) தையல் துறையில் நீங்கள் தொடர்ந்து சாதனைகளை நிகழ்த்திக் கொண்டிருக்கிறீர்கள். எனவே, உங்கள் எதிர்கால இலக்கு யாது?**

வீட்டில் உள்ள அனைத்து பெண்களும் கட்டாயம் சிறு கைத்தொழில் ஒன்று செய்ய வேண்டும். அதனூடாக தனது குடும்பத்தை பராமரிப்பதும் தனது வாழ்க்கைத் துணைக்கு உதவியாக இருக்கலாம். ஆகவே இலகுவாக காணப்படும் தையல் துறையினூடாக இதனை நிறைவேற்றலாம் என்ற எண்ணத்தில் எனக்கு தெரிந்த விடயங்களை வீட்டுப் பெண்களுக்கு கற்றுக் கொடுத்து, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த விரும்புகிறேன். அத்துடன் அத்துறையில் மென்மேலும் சிறப்பாக வளர்ச்சி அடைய வேண்டும் என்பதும் எனது ஓர் இலக்காகும்.

**6) பெண்ணாகிய நீங்கள் சமூகத்துக்கு கூற எத்தனிக்கும் விடயம் என்ன?**

ஒவ்வொரு பெண்ணும் கட்டாயம் ஏதோ வகையில் தொழில் செய்ய வேண்டும். வீட்டில் உள்ள பெண்மணிகள் சிறு கைத்தொழிலை பழகிக் கொண்டு, ஏதாவது ஒரு வகையில் பணம் ஈட்டிக் கொள்ள வேண்டும். வேலையென்று வரும்போது பல நபர்களையும் ஏராளமான பிரச்சினைகளையும் சந்திக்கும் வாய்ப்பு உண்டு. இருந்தாலும் நல்ல விடயங்களை கற்றுக் கொண்டு தீயவைகளை பாடமாக எடுத்துக் கொண்டு முன்னேறிச் செல்ல வேண்டும். அதுமட்டுமின்றி வீட்டிலிருந்துக் கொண்டே இலகுவாக தையல் துறையை ஆரம்பித்து சமூக வலைத்தளங்களினூடாக அதனை விளம்பரப்படுத்தி விற்பதனூடாக தனக்கான ஓர் அடையாளத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

**7) உங்களை எவ்வாறு தொடர்பு கொள்வது?**

எனது தொலைபேசி இல : 0771010650 மற்றும்
எனது ஈமெயில் : nooranoori824@gmail.com ஊடாக என்னைத் தொடர்பு கொள்ளலாம். குறுகிய காலத்தில் இலகுவான முறையில் தையலை கற்றுக் கொள்ளவும் முடியும்.





















### 8) எமது ஊடகமான ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகை பற்றி கூறுங்களேன் ?

வளர்ந்து வரும் எழுத்தாளர்களுக்கும் வளர்ந்து வரும் சிறுகைத்தொழில் செய்வோருக்கும் சிறந்த ஒத்துழைப்பு வழங்குவதோடு, மென்மேலும் அவர்கள் வளர்ச்சி அடைய உதவிகள் புரியும் ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகை சிகரம் தொட எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



# பேசும் பேனாக்கள்



## காலத்தால் அழியாத காற்றின் கீதங்கள்

துணிந்தெழு சஞ்சிகையின் 40 வது இதழில் வாசகப் பெருந்தகைகளோடு உறவாடிக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

"நீரளவே ஆகுமாம் நீராம்பல் தான் கற்ற
நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு"

என்ற வாசகத்தை நினைவு கூர்ந்து கொண்டு நல்ல நூல்களைப் படித்து அதன் நீதி கருத்துக்களில் நாம் லயித்துப் போய் தான் கற்ற நல்லறிவில் பிரதிபலிப்புகளை மற்றவர் வாழ்வில் எடுத்து கொள்ள அதை வெளிப்படுத்த வேண்டும் என்ற எனது எண்ணங்களை நினைவு படுத்திக் கொண்டு,

சென்ற இதழில் நான்கு நூல்களை என் வாசிப்பு அனுபவத்தின் ஊடாக பரிந்துரை செய்திருந்தேன். அந்த நூல்களை வாசித்த பலரும், நான் வாசிப்பு அனுபவம் எழுதுவதற்கு முதல் படித்த பலரும் பல்வேறு பின்னூட்டங்களை கொடுத்திருந்தார்கள். அவர்களின் பொன்னான கருத்துகள் அத்தனையும் அல்லது அவர்களின் வாசிப்பு அனுபவம் பற்றிய நீண்ட உரையாடல்கள் என்னையும் என் ஆக்கங்களையும் விமர்சனப் பார்வைகளையும் ஒருமுறை சரிபார்க்க உதவியாக இருந்தது என்றே சொல்கிறேன்.

வாசிப்பு பழக்கம் மருகி போகும் இக்காலத்தில் பேசும் பேனாக்கள் பக்கத்தினூடாக துணிந்தெழு சஞ்சிகை எடுத்துக் கொண்ட பிரயோகத்தனம் என்பது மிகக் கனதியானது என்று என்னால் மிகைப்படுத்தி சொல்ல முடிகிறது. அதற்காக வேண்டி மேதகு இப்பணியை நாங்கள் மட்டும் செய்கிறோம் என்ற பொருள் கிடையாது ஆயினும் செயற்பாட்டாளர்களில் நாமும் ஒரு பங்குதாரர்கள் என்பதே நிஜம்..

நீங்களும் உங்கள் வாசிப்பு அனுபவங்களை அல்லது நீங்கள் பரிந்துரை செய்ய நினைக்கும் நூல்கள் பற்றிய சிறு குறிப்புகளை அனுப்பி வைக்கலாம். அத்தோடு உங்களின் நூல்கள் பற்றி எமது சஞ்சிகையில் பிரசுரம் செய்ய விரும்பினால் உங்களின் நூல்களை தபால் மூலமாக எமக்கு அனுப்பி வைக்க முடியும்.

**நூல்களை தபால் மூலமாக அனுப்பி வைக்க :**
**துணிந்தெழு சஞ்சிகை ,**
**பேசும் பேனாக்கள்.**
**எம்.ஜே . ஜவ்சன் அஹமட்**
**148,வீசி வீதி பெரிய நீலாவணை 02**
**மருதமுனை.**
**0760200387**

இந்த மாதம் நான் இரு நூல்களை உங்களுக்கு அறிமுகம் செய்கிறேன். இரு நூல்களும் இலக்கிய வெளியில் இரு ஜாம்பவான்களுடைய நூல்கள். ஒருவர் மிகக் கூடுதலாக எல்லோராலும் அறியப்பட்டவர். இன்னொருவர் அதற்கு அடுத்தபடியாக எல்லோராலும் அறியப்பட்டவர். ஆனால் முதற்சொன்னவரின் கவிதைகள் எல்லாம் புதுக்கவிதைகளாக இருக்க, பின் வரிசையில் இங்கு காட்சிப்படுத்தப்படுபவர் முற்றிலும் மரபின் மீது அலாதியான பிரியம் கொண்டவர் என்பதை அவரது மாணவர்களின் ஊடாக தெரிந்து கொள்ள முடிந்தது.

ஈழத்து இலக்கியச் சூழலில் இவ்விருவரும் மிக கனவியான படைப்பாற்றலை கொண்டவர்களாகவும் கவிதை, கட்டுரை, நாடகம், விமர்சனம் போன்ற இலக்கிய இன்னோரன்ன செயற்பாடுகளில் கூடுதல் அக்கறை கொண்டவர்களாகவும் இங்கு இனங்காட்டப்படுகிறார்கள்.

அவர்களின் கனதியான பிரதி பற்றிய அறிமுகச் செயற்பாட்டை துணிந்தெழு சஞ்சிகையின் பேசும் பேனாக்கள் பகுதியில் பிரசுரம் செய்வதில் நாம் பெருமிதம் கொள்கிறோம். 1973 ஆம் ஆண்டு “எலிக்கூடு” என்ற தன்னுடைய முதல் கவிதை பிரதியை வெளியீடு செய்து வைத்து புதுக்கவிதைகளின் வழித்தடங்களில் தன் வழித்தடம் பதித்தவர் திக்குவல்லை கமால் அவர்கள்.

இலக்கிய பல்வகைமைகளில் நன்கு தேர்ச்சி பெற்ற திக்குவல்லை கமால் அவர்கள் வெளியீடு செய்யும் நான்காவது கவிதைப் பிரதி இதுவாகும்.

இவர் கவிதை, சிறுகதை, மொழிபெயர்ப்பு, நாவல், சிறுவர் இலக்கியம், விமர்சனம் என்பனவற்றில் பெயர் பெற்றவர் என்பதே கூடுதல் சிறப்பம்சமாகும்.

அட்டுலுகமை, பண்டாரகமயை பிறப்பிடமாகக் கொண்ட இவர் அரச பத்திரிகைகள், சஞ்சிகைகள், முகநூல் போன்ற ஊடகங்களில் தன் தனித்துவ கலை, இலக்கிய ஆற்றலை வெளிப்படுத்தும் ஒருவராக இனம் காணப்படுகிறார்.

இவரது இந்த பிரதியை பொறுத்தவரையில் 60 பக்கங்களை உடைய சுமார் 40 கவிதைகளுக்கு மிகையான மிக நேர்த்தியான காத்திரமான உள்ளீடுகளைக் கொண்டதாக காண முடிகிறது.

சமூகவியல் சார்ந்த பல்வேறு கவிதைகள் இங்கு காணப்பட்டாலும் அன்பு, கருணை, காருண்யம் போன்ற உணர்வுகளுக்கும் இங்கு பஞ்சம் கிடையாது என்பதை நூலை படிக்கின்ற ஒரு வாசகனால் உணர்ந்து கொள்ள முடிகிறது..




01.
நூல் :- காகிதக் காடு
நூலாசிரியர் :- திக்குவல்லை கமால்
வகை :- கவிதைகள்
வெளியீடு :- ஜீவநதி கலை அகம் -வெளியீடு - 279
உரிமை :- ஆசிரியருக்கு
நூலாக்கம் :- பரணி அச்சகம், நெல்லியாடி
பக்கங்கள் :- 60
முதல் பதிப்பு :- மே 2023
விலை :- 600/= ரூபாய்

01

இவர் கவிதைகளில் கையாண்டிருக்கும் மொழி நடை மற்றும் அதன் தனித்துவமான போக்கு என்பன வாசகர்களை கவரும் விதத்திலான பல்வேறு யுக்திகளாகவே இங்கு பார்க்கப்படுகிறது. அதிலும் இவருடைய கவிதைகள் பரிணாம வளர்ச்சி அடையும் செயற்பாடாகவுமே கருத முடிகிறது.

42 ஆவது பக்கத்தில் விலைவாசி என்ற கவிதையில் நூலாசிரியர் விலைவாசியை பாம்பாக காட்சிப்படுத்துகிறார். இதுவும் அல்லது இது போன்ற இன்னும் பல அதீத வெளிப்பாடுகள் இங்கு இந்நூலுக்கு இன்னும் கனவு சேர்ப்பதை என்னால் வாசகனாக உணர்ந்து கொள்ள முடிகிறது.

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

காத்தான்குடியை பிறப்பிடமாகக் கொண்ட ஆசிரியர் கவிச்சுடர் அமீர் அலி அவர்கள் மரபுக் கவிதைகள் எழுதுவதில் தனித்துவமான ஆற்றல் மிக்கவர்.

நூலுருப்படுத்தலில் இவர் கொண்டிராத நாட்டம் இதுவரையில் இவரது இரு பிரதிகள் வெளிவர காரணமாக இருக்கிறது.

2023.12.25 வெளியீடு செய்த "நிதரிசனமும் நிம்மதியும்" என்ற இவரது முதல் கவிதை பிரதி ஊடாக படைப்பாற்றலை நூலுருப்படுத்திய இவர், அண்மையில் இரண்டாவது "சுவடுகளின் நோக்கு" எனும் இந்த நூலை தருகிறார்.

மரபுக் கவிதை எழுதுவது, மேடை நாடகங்கள், சிறுகதைகள் என பல்வேறு இலக்கிய ரசனை கொண்ட இவர் மேடைகளில் கவியரங்குகளில் கவி பாடுவதில் மிகத் தேர்ச்சி பெற்றவராக இலக்கிய உலகில் பேசப்படுகிறார்.

இவரது முதல் பிரதி மற்றும் இரண்டாவது பிரதிகளை படித்துப் பார்க்கின்றபோது இவரது அத்தனை கவிதைகளும் இலங்கையின் அச்சு ஊடகங்களில் பிரசுரமானவையாகவும் கவி அரங்குகளில் பாடப்பட்டவையாகவும் காணப்படுவது, வாசகனை இவர் மீதான தேடலின் பக்கம் இன்னும் அழைத்துச் செல்லும் காரணியாக காணப்படுகிறது.

இவரது மாணவர்கள் எடுத்துக் கொண்ட கூடுதல் கரிசனையின் விளைவாக இரண்டாவது பிரதியும் இங்கு நூல் உருவாக்கம் பெறுகிறது. அதில் விடிவெள்ளியில் பிரசுரமாகிய மிகக் கூடுதலான கவிதைகள் இடம்பெற்று இருப்பதும் இதனை நூலுருப்படுத்த முன்னேற்பாடுகள் செய்தவர் வரிசையில் விடிவெள்ளி ஆசிரியரின் அதாவது நூலாசிரியரின் மாணவரின் செயற்பாடுகள் மிக கனவியானது என்பதும் நன்கு புலப்படுகிறது.

யாப்பு இலக்கணத்தின்படி பேசும் மரபின் ஊடாக கவிதை புனையும் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரில் இவரும் ஒருவர் என்பது எல்லோரும் அறிந்த விடயமாகும்.




02.
நூல் :- சுவடுகளின் நோக்கு
நூலாசிரியர் :- கவிச்சுடர் மு.மீ அமீர் அலி
வகை :- கவிதைகள்
வெளியீடு :- பைத்துல் பரக்கத் பதிப்பகம்
உரிமை :- ஆசிரியருக்கு
நூலாக்கம் :- ரமீஷ் சுபைத்தீன் 0765689699
பக்கங்கள் :- 60
முதல் பதிப்பு :- டிசம்பர் 2024
விலை :- 500/= ரூபாய்

02

குறித்த இந்த நூலை படிக்கின்ற போது தன் வாழ்வில் நடந்த பெரும் வரலாற்று சம்பவங்களை நூலாசிரியர் மிக எளிதாக கவிதைகளினூடாக அழகாக சொல்கிறார். இதனை படிக்கின்ற போது காலம் என்னை சில வருடங்களுக்கு அப்பால் பின்னோக்கி இழுத்துச் செல்கிறது. இதில் காட்சிப்படுத்தப்படுகின்ற இடங்கள், பொழுதுகள், சம்பாஷனைகள், சடங்குகள் என்பன மருகி வரும் பண்பாட்டு வழித்தடங்கள் என்பதை உணர முடிகிறது.

இளைய தலைமுறை சுவடுகளில் நோக்கு நூலை படிக்க வேண்டிய தேவைப்பாடு உள்ளது என்பது நிதர்சனம். படித்து பாருங்கள். மரபுகளின் கோட்பாடுகளும் அதன் முக்கியத்துவங்களும் என்னவென்பதை புரிந்து கொள்ளுங்கள்.

ஆக்கம் :-
கவிப்பொய்கை
ஜவ்சன் அஹமட்
துணிந்தெழு சஞ்சிகை

# நூல் விமர்சனம்

## சிறுகதைக் கோவை குறித்து கவிதாயினி மாஜிதா தவ்பீக் மருதமுனை.

பாடும்மீன் ஸ்ரீகந்தராசாவின் இன்னும் கன்னியாக என்ற சிறுகதைத் தொகுப்பினை முழுமையாக வாசிக்கக் கிடைத்தது...

நூற்றுக் கணக்கான சிறுகதைப் பிரதிகள் வெளிவந்து நம்மை ஆக்கிரமிப்புச் செய்தாலும் அவற்றில் ஒன்றிரெண்டு தொகுதிகள் எமது கவனத்தைப் பெற்று நம்மோடு வாழுகின்றன. ஸ்ரீகந்தராசாவின் இத்தொகுதிக் கதைகள் இனி நம்மோடு தான்.

ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு வகை. அவை நம் அருகில் வருவதும் ஒவ்வொரு விழிப்பினைத் தருவதும் நூலின் சிறப்பு.

நெஞ்சைத் தொட்ட கதைகள் பல. வயது வந்தும் திருமணம் செய்து கொள்ள வசதியற்று வாழும் முதிர்க்கன்னிகள் பற்றிய வழமையான கதை என்று நினைத்து இன்னும் கன்னியாக என்ற தலைமைக் கதையை வாசித்தபோது அது வேறொரு கதை. உடலுறவுக்குத் தகுதியில்லாத ஒருவனைத் திருமணம் செய்த கதை. அக்கதை வேறொரு திக்கு நோக்கி நம்மை அழைத்துச் செல்கிறது. புதிய கதையனுபவம்.

காணாமல் போனவள், எனக்காகவா நான், முதல் உறவு, ஒப்பீடு, திசை தெரியாத பயணம், மறு வாழ்வா? ஆகிய ஆறு கதைகளும் படிப்பினை தருவன. அவை காலத்திற்குப் பொருத்தமான கதைகளாக மிளிர்வது நம் பார்வைக்கு வசந்தம்.

இலங்கை நாட்டில் பயங்கரவாதச் சூழலில் எழுதப்பட்ட பல கதைகள் யதார்த்தமான கதைகள். உண்மையில் கதாசிரியருக்கு ஒரு சபாஷ்...

அவுஸ்திரேலியாவில் புலம் பெயர்ந்து அங்கேயே குடியுரிமை பெற்று வாழ்ந்து வரும் பொடியன்கள் அனைவருமே இப்படித்தானா....
அங்குள்ள கலாசாரம் இதுதானா.....
அங்குள்ள வாழ்க்கை இப்படித்தானா.....
என்றெல்லாம் மனதைப் பதை பதைக்க வைக்கிறது.....

கதையாக இருந்தாலும் நிஜமாகத் தெரிகிறது.... அவுஸ்திரேலிய மாப்பிள்ளைமாருக்கு பிள்ளைகளை கலியாணம் கட்டிக் கொடுத்து விட்டு காலுக்கு மேலே காலைப் போட்டு கற்பனை வானில் நீந்த முடியாது...

எப்பொழுது தலையில் இடி விழுமென்று தெரியாது. கண்ணீரில் கதை எழுதும் எதிர்பார்ப்போடு இருக்க வேண்டுமென்று இத்தொகுதியின் சில கதைகள் பேசுகின்றது.




கதாசிரியருக்கு கற்பனை வளம் கொள்ளைதான்.....

கனவுகளைச் சுமந்து கற்பனை வானில் பறந்து எண்ணங்களை இறக்கி வைக்க எதிர்பார்த்த வேளை ஏமாற்றங்களை எதிர்கொள்வதாகச் சில கதைகள். அது வேதனையின் உச்சமே.

இத்தொகுதிக் கதைகள் சமுதாயத்தில் சிறந்த முன்மாதிரியையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் என்பது எனது கருத்து.

நான் வரமாட்டேன் என்ற சரசா சங்கரன் கதையைப் படித்தேன்...
இது போன்ற எத்தனை சங்கரனை எம் சமூகத்தில் காண்கின்றோம்..

சங்கரனை கதாசிரியர் லேகிய விளம்பரத்தில் காணப்படும் மனித தோற்றத்தைக் காட்டும் எழுத்து வரிகளும் தேக்குமர உடல் கட்டு என்ற உவமையும் கதைக்கு மேலும் ரசனையூட்டுகிறது.

சங்கரன் போன்றோர்க்கு வாழ்க்கைப்படும் சரசாக்கள் வாழ்வு கண்ணீர் மழைதான்...

கடைசியில் அவன் வார்த்தையை உறுதி கொண்டு சாதித்தான். குடிகாரன் உள்ளத்திலும் கௌரவமுண்டு என்பதை கதை கூறியது...

பெற்ற மனம் என்ற கதை போர் சூழலில் அதுவும். வட பகுதியில் மக்கள் பட்ட கஷ்டங்களையும், துன்ப துயரங்களையும், வேதனைகளையும், சோதனைகளையும் அப்படியே அப்பட்டமாய் விளக்கியுள்ளது....

அதன் மூலம் இலங்கையில் நடந்த பயங்கரவாத போர் சூழலில் எப்படி மக்களின் வாழ்க்கை இருந்தது என்பதை புதிய தலைமுறையினர் புரியும் படியும் அறியும் படியும் காட்டியுள்ளார் கதாசிரியர்.

போர் முடிந்து சமாதானச் சூழ்நிலையில் மக்கள் வாழ்ந்தாலும் போர் சூழலின் போது மக்களின் மனங்களில் ஏற்பட்ட காயங்கள் ஆறாத வடுக்களாகவே ஆழமாய் பதிந்துள்ளது என்பதையும் அதே கதைகள் உணர்த்துகின்றன.

காணாமல் போனவர்கள் என்ற கதை யாழ் மண்ணின் வாசனை. அது மூக்கைத் துளைத்து மகிழ்வு தந்தது.

மொத்தத்தில் பத்துக் கதைகள் அவை ஸ்ரீ கந்தராசாவின் முத்துக் கதைகள். தமிழ்ச் சிறுகதை உலகுக்கு சத்துக் கதைகள்.

இன்னும் பல தொகுதிகளை அவரிடமிருந்து, நாம் எதிர்பார்க்கின்றோம்.

கதாசிரியருக்கு என் மனம் நிறைந்த பாராட்டுகள்.



கவிதாயினி மாஜிதா தவ்பீக்
மருதமுனை

## இளம் கலைஞர் அறிமுகம்

# கவியாழர் விருதும் இளங்கலைஞர் விருதும் பெற்ற பாடலாசிரியர் வியன்சீர்

இந்திய தமிழக மண்ணில் கவியாழர் விருதும், ஈழத்தில் இளங்கலைஞர் விருதும் பெற்ற எழுத்தாளர் வியன்சீர் அவர்கள் திரு. திருமதி ரவீந்திரா சசிகலாவின் சிரேஷ்ட புதல்வராவார்.

தனது ஆரம்பக் கல்வியினை கமு/உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் தொடர்ந்த வியன்சீர் பின்னரான காலத்தில் கல்முனையில் இருந்து மட்டுநகருக்கு இடம் பெயர்ந்ததன் காரணமாக மட் / இந்துக் கல்லூரியில் கலைப் பிரிவில் தனது உயர்தர பாடநெறியினை மேற்கொண்டார்.

தனது பாடசாலை வாழ்வில் எழுத்தாக்க முயற்சிகளிலும், பாடலாக்க முயற்சிகளிலும் தீவிரமாக செயற்பட்டதன் காரணமாக உயர்தரம் கற்றுக் கொண்டிருக்கும் போதே 2012 ஆம் ஆண்டு பாடசாலை மட்டத்தில் “பூக்குமோ புது உலகு” எனும் கவிதை நூலினையும் வெளியீடு செய்தார். இதுவே இவரது கன்னி நூலாக கவிஞர் என்ற அடையாளத்தை பாடசாலை மட்டத்தில் பெற்றுக் கொண்டார்.

அதன் பின்னர் மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரியில் குடிசார் தொழில் நுட்பவியலில் முதலாம் வருடக் கற்கை நெறியினை முடித்துக் கொண்ட வியன்சீர் மட்டக்களப்பு தேசிய கல்வியற் கல்லூரிக்கு நிருமாணத் துறை கற்கை நெறிக்காக தெரிவு செய்யப்பட்டு, அதனை திறம்பட பூர்த்தி செய்தவர், தற்போது குறித்த



பாடத்திற்கான ஆசிரியராக கரடியனாறு மகா வித்தியாலயத்தில் பணியாற்றி வருகின்றார்.

அதன் பிற்பட்ட காலத்தினில் முற்று முழுதாக தன்னை எழுத்துத் துறையில் ஈடுபடுத்திய வியன்சீர் காணொளிப் பாடல்கள், ஆலயங்களுக்கான பக்தி பாடல்கள், குறுந்திரைப்படப் பாடல்கள் என தன்னை ஈடுபடுத்தி பல வெளியீடுகளையும் கண்டதோடு, பல விருதுகளுக்கும் சொந்தக்காரராக உள்ளார்.

அதுமட்டுமில்லாமல் 2021 ஆம் ஆண்டு பல தடைகளையும் தாண்டி மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தில் தான் எழுதிய “அந்தரக்கிளைகள்” எனும் கவிதை நூலினையும் வெளியீடு செய்தார்.



இந்த நூலானது வியன்சீருக்கு பெரும் மதிப்பினையும், மேலும் பல வாய்ப்புகளையும் பெற்றுக் கொடுத்தது எனலாம். அதனைத் தொடர்ந்து இந்தியாவின் தமிழகம் வரை சென்று தன் கால்களைப் பதித்த பாடலாசிரியர் வியன்சீருக்கு இந்தியத் தமிழக கவிக்குழுமம் “கவியாழர்” எனும் பட்டத்தினையும் வழங்கி கௌரவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




அதனைத் தொடர்ந்து எழுத்துத் துறையிலும் பாடலாக்கத் துறையிலும் மிளிர்ந்து கொண்டிருந்த வியன்சீருக்கு கடந்த வருடம் இலங்கையின் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்படும் பெரும் விருதுகளில் ஒன்றான “இளங்கலைஞர்” விருதும் கிடைக்கப் பெற்றதும் குறிப்பிடத்தக்கதாகும்.



தற்காலத்தின் போக்கில் வித்தியாசமானதோர் வார்த்தைக் கோர்வைகளோடு தன் எழுத்துக்களை சமூகத்தினுள்ளே பரிணமிக்க வைத்துக் கொண்டிருக்கும் எம் வியன்சீரின் படைப்புகளை சமூகம் விரும்புவதையும் காணக் கூடியதாக உள்ளது.

தன் படைப்புகளை ஒவ்வொரு கோணத்திலும், ஒவ்வொரு பரிணாமங்களோடும் சமூகத்திற்கு தரும் திரு.வியன்சீரின் கலைப் பயணமும் எழுத்துப் பயணமும் மென்மேலும் சிறப்புற துணிந்தெழு சஞ்சிகை சார்பில் வாழ்த்துகிறோம்.



**செவ்வி கண்டவர்:**
**குலசிங்கம் கிலசன்**
**இணையாசிரியர்**
**துணிந்தெழு சஞ்சிகை**

# கிழக்கு மாகாணத்தில் அதிகளவான சுற்றுலா பயணிகளை கவரும் “சல்லித்தீவு கடற்கரை”



இலங்கையின் தலைநகர் கொழும்பிலிருந்து சுமார் 298 கிலோமீட்டர் தூரத்தில் சல்லித்தீவு கடற்கரை அமைந்துள்ளது.

குறிப்பாக இக்கடற்கரை மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து சுமார் 61 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. மேலும் வாகரை பனிச்சங்கேணிப் பாலத்தில் இருந்து சுமார் மூன்று கிலோ மீட்டர் அண்மித்துக் சல்லித்தீவு கடற்கரை காணப்படுகின்றது.

மட்டக்களப்பில் இருந்து திருகோணமலைக்குச் செல்லும் பிரதான பாதையான மட்டக்களப்பு, செங்கலடி, ஓட்டமாவடி, நாவலடி, காயங்கேணி, மாங்கேனி பாதையினூடாகப் பயணித்து பனிச்சங்கேணி பிரதேசத்தை சென்றடைந்ததும் அப்பகுதியிலேயே சல்லிதீவு கடற்கரை காணப்படுகின்றது. சல்லித்தீவு கடற்கரை காணப்படும் பிரதேசமானது பின்தங்கிய மக்கள் வாழும் பிரதேசமாகக் காணப்படுவதனால் தற்போது தான் இப் பிரதேசம் படிப்படியாக வளர்ச்சி அடைந்து வருகின்றது. இப்பகுதியில் வாழும் மக்கள் மீன்பிடித் தொழிலுடன் தொடர்புடையவர்களாகக் காணப்படுகின்றார்கள். அதுவும் சிறு தோணிகள் மூலமாகவும், சிறு படகுகள் மூலமாகவும் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றார்கள். மேலும் கரவலை என்று சொல்லப்படும் மீன்பிடித் தொழிலிலும் இப் பிரதேச மக்கள் ஈடுபடுவதை இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளால் அவதானிக்க முடிகின்றது.

அத்தோடு இக்கடற்கரையானது வாகரை விரிகுடாவுக்கு அண்மித்த பகுதியில் காணப்படுகின்றது. “சல்லித்தீவு” என்ற பெயர் வரக் காரணமாக அமைந்தது, இப்பகுதியில் அதிகளவான சல்லிக்கற்கள் கடல் அலைகள் மூலமாக கரை ஒதுங்குவதாலும் இப்பகுதி கடலால் சூழப்பட்ட தன்னகத்தே கொண்ட அழகான தீவாக காணப்படுவதாலும் சல்லித்தீவு என பெயர் வர காரணங்களில் ஒன்றாகவும் அமைந்துள்ளது.

மேலும் இங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் இப்பகுதிக்கு வருகை தரும் போது அவதானிக்க வேண்டிய விடயம் தொடர்மழைக் காலங்களில் இப்பகுதிக்கு வருகை தந்தால் தமது சுற்றுலாவை முறைப்படியாகத் திட்டமிட்டுக் கழிக்க முடியாத துர்ப்பாக்கியமான நிலை ஏற்படலாம். குறிப்பாக, வெயில் காலங்களில் இப்பகுதிக்கு வருகை தருவதன் மூலம் சிறப்பான அனுபவங்களையும் மற்றும் மனமகிழ்வினையும் இங்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளினால் அனுபவிக்க முடியும். இப்பகுதியில் நீங்கள் பயணிக்கும் போது, இங்கு காணப்படும் சிறிய மணல்களில் பாதணிகள் அணியாமல் வெறும் கால்களுடன் பயணிக்கும் போது சுற்றுலாப் பயணிகளுக்கு



புது வகையான உத்வேகத்தையும் அளிக்கின்றது. மேலும் இப்பகுதியில் நீரினால் சூழப்பட்ட கரையினூடாக இலகுவாக நடந்து செல்லும் தூரத்தில் அழகிய மரங்கள், காடுகளை ஒத்த அழகான சுற்றுச்சூழல் ஒன்றும் காணப்படுகின்றது. அதனால் இப்பகுதியில் பல்வேறு வகையான பறவை இனங்கள் கூடுகட்டி வாழ்ந்து மகிழ்கின்றன. இவ்வகையான அரிய காட்சிகளைக் கூட இங்கு வரும் சுற்றுலா பயணிகள் ரசிக்க முடிகின்றது. மேலும் இப்பகுதியில் மணல் பூராகவும் முருகைக் கற்கள் பரந்து கிடக்கும் அழகிய காட்சிகளைக் கூட கண்டு ரசிக்க முடியும்.

அது மாத்திரம் இன்றி பல்வேறு வகையான சிற்பிகள், முத்துக்களை கூட கடல் கரை ஒதுக்கி இருக்கும் அற்புதக் காட்சிகளை கூட நீங்கள் கண்டு களிக்க முடியும். மேலும் இக்கடற்கரையில் அரிய வகையான பவளப்பாறைகள் மற்றும்



முருகைக் கற்கள் காணப்படுவதனை அறிய முடிகின்றது. இக்கடற்கரையானது மிகவும் துல்லியமானதும் பிரகாசமானதாகவும் இக்கடல் நீர் காணப்படுகின்றது.

இதன் மூலம் கடற்கரையில் இருந்து அதன் அழகை ரசிக்க முடியும். மேலும் இக்கடற்கரைக்கு வருகின்றவர்கள் இங்கு நீராடுவதற்கு பொருத்தமான சூழல் நிலவுவதால் இங்கு வரும் சுற்றுலா பயணிகள் நீராடி மகிழ்கின்றார்கள். மிகவும் அமைதியானதாகவும், சாந்தமாகவும் இக்கடற்கரையானது காணப்படுவதால் இங்கு வரும் சுற்றுலா பயணிகளுக்கு மேலும் மன ஆறுதலையும் உற்சாகத்தையும் ஊட்டுகின்றது. குறிப்பாக இப்பிரதேசம் சுனாமி பேரழிவு மூலமாகவும் பல்வேறு வகையில் பாதிக்கப்பட்டிருந்தது.

அதன் பிற்பாடு நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தத்தின் போதும் அதிகமாக பாதிக்கப்பட்டிருந்தது. யுத்தம் முடிவடைந்த கையோடு இப்பகுதியினை பராமரிக்கும் பொறுப்பை இலங்கை ராணுவத்தினர் தற்போது முதல் மேற்கொண்டு வருகின்றனர். அதனால் இப்பகுதி மிகவும் தூய்மையானதாகவும், பாதுகாப்பு மிகுந்த பகுதியாகவும் காணப்படுவதுடன் இங்கு வரும் சுற்றுலா பயணிகளுக்கு நம்பிக்கையூட்டுகின்றதாகவும் காணப்படுகின்றது.

தற்போது சகல வசதிகளையும் கொண்ட சுற்றுலா விடுதிகள் தற்போது இப்பகுதியில் காணப்படுவதால் சல்லித்தீவின் சுற்றுலாத்துறை வளர்ச்சி மேலோங்க காரணமாக அமைகின்றது. அண்மைக் காலம் தொட்டு இப்பகுதிக்கு வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் தொடக்கம் உள்நாட்டு சுற்றுலா பயணிகளும் இக்கடற்கரையின் அழகை தரிசிப்பதற்காக வருகை தருவதை அவதானிக்க முடிகிறது.

நீங்களும் உங்கள் விடுமுறையை சிறப்பாகக் கழிப்பதற்குத் திட்டமிட்டு இருந்தால் சல்லித்தீவு கடற்கரை உட்பட பல்வேறு சுற்றுலாத் தலங்களை கிழக்கு மாகாணத்திற்கு வருகை தந்து ஒரு முறையாவது தரிசித்துச் செல்லுங்கள் பயன் பெறுவீர்கள்.










ஆக்கம்:
எஸ்.ஐ.எம்.நிப்ராஸ் ( JP),
ஊடகவியலாளர்

# வாசிப்பு பழக்கத்தின் மீது சிறுவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்துவோம்




இன்றைய நவீன உலகில் வாசிப்பு பழக்கம் என்பது மிக அதிகமானோர்களுக்கு கிடையாது. வாசிப்பு என்றாலே அதிகமானோருக்கு எரிச்சல் ஊட்டும் விதமாகவே உள்ளது.

இப்படி ஒரு பக்கமிருக்க இந்த வாசிப்பை உயிராக நேசிப்பவர்களும், இதை தனது நண்பனாக்கிக் கொண்டோர்களும் உள்ளனர். உண்மையிலேயே வாசிப்பு பழக்கம் உள்ளவர்களை பாராட்டியாக வேண்டும். இந்த வாசிப்பு பழக்கமானது ஒவ்வொரு மனிதர்களிடத்திலும் கட்டாயம் இருக்க வேண்டிய மிக நல்ல பண்புகளுள் ஒன்றாகும்.

இந்த வாசிப்பு பழக்கத்தை பலரும் வெறுப்பதற்கு பல காரணங்கள் இருந்தாலும் நேசிக்க ஓராயிரம் காரணங்கள் உள்ளது. அவற்றை பார்த்தோமேயானால் வாசிப்பு பழக்கம் எம்மிடத்தில் இருந்தால் அந்த பழக்கத்தின் மூலம் எமக்கு நிறைய பயன்கள் கிடைக்கின்றது.

அவற்றில் சில...

1) எமது அறிவுத்திறன் அதிகரிக்க செய்கின்றது.

2) வாசிப்பு பழக்கத்தின் மூலம் நிறைய தகவல்களையும் எமக்கு திரட்டிக் கொள்ளக்கூடிய



வாய்ப்புகள் அமைகின்றது.

3) வாழ்க்கை நடைமுறைகளில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ள விரும்பினால் புத்தகங்கள் வாசிப்பின் மூலம் அது சாத்தியமாக்கப்படுகின்றது.

4) வாழ்க்கை சம்பந்தமாக அல்லது ஏனைய விடயங்களில் சந்தேகங்கள் இருக்குமேயானால் அந்த சந்தேகங்களுக்கான பதில்களும், தீர்வுகளும் புத்தகங்களிலே காணப்படுகின்றது.

5) புத்தகங்கள் வாசிப்பின் மூலம் எமது உள்ளம் அமைதி பெறுகின்றது. மற்றும் தெளிவடைகின்றது.

எந்தவொரு புத்தகமாகட்டும் அதில் பயன் தரும் விதத்தில் ஏதேனும் ஒற்றை விடையமேனும் இருக்காமலிருக்காது.
இவ்வாறான பயன்களுடன் மேலும் அதிகளவிலான பயன்கள் எமக்கு வாசிப்பு பழக்கத்தின் மூலம் கிடைக்கப் பெறுகின்றது. புத்தகங்களில் மட்டுமல்ல சஞ்சிகைகள், பத்திரிகைகள் போன்றவைகளின் மூலமும் எமது வாசிப்பு பழக்கத்தை எம்மால் மேம்படுத்திக் கொள்ள முடியும்.

ஆனால் இந்த பயன்களை அறியாமலும், தெரியாமலும் பலரும் இந்த பழக்கத்தை விரும்பாமல் வெறுத்து ஒதுக்கவே செய்கின்றனர். உண்மையிலேயே வாசிப்பு என்பது மனித குலத்தின் அறிவுச் சொத்தாகும். இந்த பழக்கத்தின் அருமையையும், நாம் ஒவ்வொருவரும் கட்டாயம் தெரிந்துக்கொள்ள வேண்டும். எமது நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும், மற்றும் ஏனையவர்களுக்கும் இந்த வாசிப்பின் பெறுமதியை சொல்லிப் புரியவைக்க வேண்டும்.

குறிப்பாக வளர்ந்து வரும் பிள்ளைகளுக்கு இந்த வாசிப்பு பழக்கத்தின் மீது ஆர்வத்தை ஏற்படுத்தும் விதமாக இந்த வாசிப்பின் பெறுமதியை அவர்களிடத்தில் விளங்கப்படுத்தல் வேண்டும்.

வளர்ந்து வரும் பிள்ளைகள் எமது எதிர்கால சந்ததியினர் ஆவார்கள். அவர்களுக்கு வாசிப்பின் பெறுமதியை நிச்சயம் சொல்லி புரிய வைக்க வேண்டியது எமது கடமையாகும். அவர்களுக்கும் வாசிப்பின் மீது ஆர்வத்தை ஏற்படுத்தல் எமது பொறுப்பாகும்.

## முயலும் ஆமையும் கதையில் முயல் தோற்றதா? ஆமை தோற்றதா?



## முயலாமையே தோற்றது...



**ஆக்கம்:**
**பஸ்லா காதர்**
**நாவலப்பிட்டி**

# எனது விழிகள்

## கருப்பொருள் : பூக்கள்

இம்மாத சிறந்த புகைப்படம்


எம்.பி.ஜெ.சப்னாம் - பன்டாரவள


எம்.கே.எ.யாஸீன் - ஹெம்மாத்தகம


பாத்திமா நப்ரா - சென்றல் கேம்ப்


அம்னா அனால் - புத்தளம்


ஸிக்ரா - ஹெட்டிபொலை


எம்.எஸ்.எப்.சல்ஹா - புத்தளம்


இஸ்ஸதுல் பர்ஹா - துண்டுவ


ஹப்ஸா நௌபல் - உயன்வத்த


ஆயிஷா நசார் - மருதானை

# எனது விழிகள்

## கருப்பொருள் : பூக்கள்




மரியம் றிஸ்வான் - கல்ஹின்னை, கண்டி



யோகராசா கவிதா- அன்னமலை -01



எஸ்.எப்.ருஸ்தா - ஹொரவப்பத்தானை



எ.எஸ்.எம்.அர்சாத்- மாவனல்ல



உமாரா முஸம்மில்- வடதெனிய



பாத்திமா சாரா - அகுரணை



பாத்திமா ஹப்ஸா - கொட்ராமுல்லை



எம்.பி.ஜெ.சப்னாம் - பன்டாரவளை



எம்.என்.எப். சர்மிலா - மெதிஹெறன

# Google Wallet vs Apple Wallet: டிஜிட்டல் பாஸ்போர்ட் எப்படி வேலை செய்கிறது?




உலகின் மிகப்பெரும் டெக் நிறுவனங்களான கூகுள் (Google) மற்றும் ஆப்பிள் (Apple) அவற்றின் வாலெட்களில் டிஜிட்டல் பாஸ்போர்ட் அணுகல்களை கொடுக்கின்றன. உங்களது பாஸ்போர்ட்டை டிஜிட்டலாக மாற்றி அதை விமான நிலையங்களில் அடையாள சரிபார்ப்புக்கு (Identity Verification) பயன்படுத்தினால், எப்படி இருக்கும்? அதேபோல லக்கேஜ் டிராக்கிங் மற்றும் டெர்மினல் டிராக்கிங்கை மேப் மூலம் செய்ய முடிந்தால், இன்னும் சுலபமாக இருக்கும் அல்லவா? இதுபோன்ற பீச்சர்களே வாலெட்களில் கிடைக்கின்றன.

டிஜிட்டல் பாஸ்போர்ட் முக்கிய அம்சங்கள்: உள்நாட்டு விமான பயணங்களுக்கு மட்டும், டிஎஸ்ஏ செக்பாயின்ட்களில் மட்டும், வெரிபிகேஷன் உள்நாட்டு ஐடிகளுக்கு, டிஜிட்டல் சப்போர்ட் ஃபிங்கர்பிரிண்ட், பின் நம்பர், பாஸ்கோட் பாதுகாப்பு.

கூகுள் வாலெட் ஐடி பாஸ் (Google Wallet ID Pass):
கூகுள் நிறுவனமானது, முதலில் பாஸ்போர்ட் சேவையை டிஜிட்டலுக்கு மாற்றியது. கூகுள் வாலெட் மூலம் அமெரிக்க பாஸ்போர்ட்டை (US Passport) பயன்படுத்தி ஐடி பாஸ் (ID Pass) உருவாக்கி கொள்ளலாம். இந்த ஐடி பாஸ் இருந்தால் போதும், டிஎஸ்ஏ செக்பாயின்ட்களில் (TSA Checkpoints) வெரிபிகேஷன் செய்துகொள்ளலாம்.

ஸ்டேட் ஐடி (State ID), டிரைவர் லைசென்ஸ் (Driver License) போன்ற ஆவணங்கள் தேவைப்படாது. ஆனால், இது பாஸ்போர்ட்டுக்கு மாற்று கிடையாது. இருப்பினும், விமான நிலையங்களில் இது அங்கீகரிக்கப்படும். 2024ஆம் ஆண்டின் இறுதியில் அமெரிக்காவின் உள்நாட்டு விமான பயணங்களுக்கு இந்த ஐடி பாஸ் சேவை தொடங்கப்பட்டது.

கடந்த ஏப்ரல் மாதத்தில் யுகேவிலும் (UK) தொடங்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, கூகுள் வாலெட் சேவை கிடைக்கும் நாடுகளில் இந்த ஐடி பாஸ் பீச்சர்கள் படிப்படியாக கொண்டுவரப்பட வாய்ப்புகள் உள்ளன. ஆனால், இது சர்வதேச விமான பயணங்களுக்கு கொண்டுவரப்பட்டதாக தெரியவில்லை. உள்நாட்டில் மட்டுமே சேவைகளை கொடுக்கிறது.

இந்த டிஜிட்டல் ஐடியையும் உள்நாட்டிலேயே விமானப் பயணம் மேற்கொள்ளும் போது டிஎஸ்ஏ செக்பாயின்ட்களில் வெரிபிகேஷனுக்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.

இது மட்டுமல்லாமல், ஆப்பிள் நிறுவனமானது, ஐஓஎஸ் 26 அப்டேட்டில் கூடுதலாக பல்வேறு பீச்சர்களை சேர்த்துள்ளது. போர்டிங் பாஸ் மூலம் லைவ்







டிராக்கிங் கொடுக்கிறது. ரியல்டைம் டிராக்கிங் (Real-time Tracking): அதாவது, போர்டிங் பாஸ் ஸ்கேனிங் மூலம் உங்களது விமானப் பயணத்தை ரியல்-டைம்மில் டிராக் செய்ய முடியும். அந்த ஆக்டிவிட்டிகளை உங்களது பேமிலி அல்லது நண்பர்களுக்கு ஷேர் செய்யலாம். அவர்களும் நீங்கள் சென்று கொண்டிருக்கும் விமானம் எங்கே இருக்கிறது என்பதை மேப் மூலம் டிராக் செய்து தெரிந்து கொள்ளலாம். இது போக விமான நிலையத்தில் உங்களது லக்கேஜ் டெலிவரி செய்யப்படும் இடத்தை தெரிந்துகொள்ள டிராக் லக்கேஜ் (Track Luggage) பீச்சர் கிடைக்கிறது. அதேபோல நீங்கள் செல்ல வேண்டிய டெர்மினலுக்கான மேப் சேவையும் இதில் கிடைக்கிறது. ஆகவே, ஆப்பிள் வாட்ச் அல்லது ஐபோன் மூலம் குழப்பம் இல்லாமல், அங்கு செல்லலாம்.

டிஜிட்டல் பாஸ்போர்ட் எதிர்காலம்:
அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளில் மட்டுமே தொடங்கப்பட்டாலும், இது உள்நாட்டில் மட்டுமே டிஜிட்டல் பாஸ்போர்ட் சேவைகளை கொடுப்பதால், மற்ற நாடுகளிலும் வர வாய்ப்புகள் அதிகம். ஏனென்றால், உள்நாட்டில் பயன்படுத்தப்படும். பாஸ்போஸ்ட் மற்றும் கூகுள் வாலெட்டுக்கான வெரிபிகேஷன் என்பது மிகவும் பாதுகாப்பானதாகும். ஆகவே, வெரிபிகேஷனுக்கு இதை பயன்படுத்துவது என்பது சிக்கலான காரியம் ஒன்றுமில்லை. இந்தியாவில் உள்நாட்டுப் பயணம் மேற்கொள்ளும் போது, ஆதார் கார்டு, டிரைவிங் லைசென்ஸ், ஓட்டர் ஐடி போன்ற ஆவணங்கள் கேட்கப்படுகிறது. இது டிஜிலாக்கரிலும் இருக்கிறது. ஆகவே, கூகுள் வாலெட் அல்லது அதுபோன்ற ஆப்கள் மூலம் டிஜிட்டல் பாஸ்போர்ட்டை விரைவில் எதிர்பார்க்கலாம்.

*ஆக்கம்:*
*அஸ்ரி இப்னு அமீர் - பிரதி முகாமையாளர்*
*துணிந்தெழு சஞ்சிகை*

# தங்கம் பூசப்பட்ட கார்! உலக கவனத்தை ஈர்த்த இந்தக் காரின் மதிப்பு எவ்வளவு தெரியுமா?



ஷார்ஜா எக்ஸ்போ மையத்தில் நடைபெற்று வரும் 55வது Watch and Jewellery Middle East Show-இல், 3.67 மில்லியன் திர்ஹாம் (சுமார் 1 மில்லியன் அமெரிக்க டொலர்) மதிப்புள்ள தங்கம் தடவிய Nissan கார் பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

"Gold-Zilla" என அழைக்கப்படும் இந்த காரின் முழு மேற்பரப்பும் 24கரட் தங்கத்தால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

இந்த கண்காட்சி ஜூன் 1, 2025 வரை நடைபெறும் நிலையில், உலகளாவிய நகை, தங்கம் மற்றும் கடிகார பிராண்டுகளை வழங்கும் 500க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்கேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுற்றுலாப் பயணிகளை கவரும் சீனாவின் ஊதா நிறப் பூந்தோட்டம்



ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதத்தில், சீனாவின் சின்ஜியாங் மாகாணத்தில் அமைந்துள்ள ஹுவோசெங் மாவட்டம், வெறும் ஒரு சுற்றுலா இடமாக அல்லாமல் ஒரு ஊதா வண்ணக் கனவாக மாறுகின்றது.

இந்தப் பகுதியில் பரந்து விரிந்த வயல்களில் மலரும் லாவெண்டர் (Lavender) பூக்கள், ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகளை ஆண்டுதோறும் ஈர்க்கின்றன. இந்த காட்சிகள் புகைப்படக் கலைஞர்கள், இயற்கை காதலர்கள் மற்றும் சமூக வலைத்தளப் பயனாளர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

இப்பூச்செடிகள் வணிக ரீதியாக அழகுப் பொருட்கள், வாசனைத் திரவியம் மற்றும் மருத்துவப் பயன்பாடுகளுக்காக பயனுள்ளதாகவும் உள்ளன. இதன் மூலம் உள்ளூர் விவசாயிகள் நலன் பெறுவதுடன் சுற்றுலா வருவாயையும் உயர்த்தி வருகின்றன.













ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த உறுப்பினர்களுக்காக அட்டாளைச்சேனையில் அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்ட ஒன்று கூடல் நிகழ்வில், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவராக இருந்து அரும்பணியாற்றிய சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூஷணம் என்.எம்.அமீனுக்கு போரத்தின் முன்னாள் செயற்குழு உறுப்பினரும் ஊடக ஒருங்கிணைப்பாளரும் பல்துறைக் கலைஞரும் துணிந்தெழு சஞ்சிகையின் பிரதம ஆசிரியருமான ஊடகவியலாளர் எம்.எஸ்.எம். ஸாகிர் பொன்னாடை போர்த்தி கௌரவித்த வேளை...

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

## உங்கள் விளம்பரங்களையும்
## குறைந்த கட்டணத்தில்
## இப்போதே பகிர்ந்து கொள்ளுங்கள்

0757000791 | +97431060249




#Thuninthelu www.skytamilnews.com